**O.S.No.186/2014**

**Date:06.07.2018**

வாதி தரப்பு சாட்சி 3 – பூமிநாதன், த-பெ.சின்னஉடைச்சி

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை

யாசின் என்பவர் இடத்தை கடந்த 28 வருடமாக காவல் காத்து பராமரித்து வருவதாக தெரிவித்துள்ளதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பத்திரத்தில் எழுதி கையெழுத்து வாங்கியுள்ளேன். நான் 28 வருடமாக யாசின் இடத்தை காவல் காத்து பராமரித்து வருவதாகச் சொல்வது பொய் என்றாலும், நான் வாதிக்கு சாதகமாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு வாதி, பிரதிவாதிகள் பெயர்கள் தெரியுமா என்றர்ல தெரியும், வாதியின் பெயர் என்ன என்றர்ல கிருஷ்ணன் ஆகும், பிரதிவாதியின் பெயர் என்ன என்றால் ராமசாமி வேளார், காளிமுத்து ஆகும். வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் விவசாயம் அவர்தான் செய்து வருவதைக் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவாச் சொத்தின் சர்வே எண், நான்குமால், விஸ்தீரணம் தெரியுமா என்றால் 13 முதல் 15 ஏக்கருக்குள் விஸ்தீரணம் இருக்கும், சர்வே எண், நான்குமால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தை படித்துப் பார்த்துதான் கையெழுத்துச் செய்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் பொய்யானவை என்றாலும், நான் வழக்கிற்காக வாதிக்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.